விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 21 வெள்ளி 04.06.2021 மலர் - 2, இதழ் - 59

# சேவைத்துளிகள்



மாற்றுத்திறனாளி, முதியோர், முன்களப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு பாரதி சேவா சங்கம், ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை போர்ட் சிட்டி மூலமாக 6 நபர்களுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண பொருளை சக்ஷம் மூலமாக வழங்கப்பட்டது.



ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் நீலகிரி சேவாகேந்திரம் சார்பில் 1,000 குடும்பங்களுக்கு காய்கறி, மளிகை பொருட்கள் வழங்கும் நிகழ்வை கோத்தகிரியில் குன்னூர் துணை ஆட்சியர் ரஞ்சித்சிங், கோத்தகிரி வட்டாசியர் கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரில் விஷ்வ ஹிந்து பரிஷத் மற்றும் பஜ்ரங்தள் சார்பில் ரத்ததான முகாம் நடைப்பெற்றது.




தம்மம்பட்டியில் சேவாபாரதி சார்பில் 'இருப்பவர்கள் கொடுப்பதற்கு, இல்லாதவர்கள் எடுப்பதற்கு' என்ற பெயரில் இயலாதவர்களுக்கு இயன்றவர்கள் உணவுப்பொருட்களை வழங்கும் உன்னத ஏற்பாடு.

தீ விபத்து ஏற்பட்ட மண்டைக்காடு
பகவதி அம்மன் கோயிலைத்
தூய்மைப் படுத்தும் பணியில்
ஆர்.எஸ்.எஸ் மற்றும் #அதன்
துணை அமைப்புகலை சேர்ந்த
சகோதரர்கள்.






சென்னை பெருநகர
மாநகராட்சிக்கு,
சேவாபாரதி
தமிழ்நாடு சார்பாக
பத்து ஆக்ஸிஜன்
செறிவூட்டிகள்
வழங்கப்பட்டன.
அதனை மாநகராட்சி
துணை ஆனையர்
மேகநாத ரெட்டி
பெற்றுக் கொண்டார்.

ஒடிசாவில் யாஸ்
புயலால்பாதிக்கப்பட்ட
பகுதி மக்களுக்கு உணவு
தயாரித்து அளித்து
வரும் ஆர்.எஸ்.எஸ்
ஸ்வயம்சேவகர்கள்
மற்றும் சேவாபாரதி
தொண்டர்கள்.





காஞ்சிபுரத்தில் ஆர்.எஸ்.எஸ் சார்பில்
இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிகள்
மற்றும் 19 வகையான மளிகை
பொருட்கள் அடங்கிய தொகுப்புகள்
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்
வழங்கப்பட்டது.

ஹாங்காங் விஷ்வ ஹிந்து
பரிஷத் சார்பாக இரண்டு
ஆக்ஸிஜன் செறிவூட்டி
இயந்திரங்கள் வழங்கப்பட்டது.
இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர்
சுற்று வட்டார மக்கள் அதனை
இலவசமாக பயன்படுத்த
அர்ப்பணிக்கப்பட்டது.
ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ மணவாள
மாமுனிகள் அதனை ஆசீர்வதித்து
துவக்கிவைத்தார்.






சேவா இண்டர்நேஷனல் சேவாபாரதி தமிழ்நாடு மூலமாக ஆம்பூர், மாதனூர் அரசு மருத்துவமனைக்காக ஆம்பூரில் இரண்டு ஆக்ஸிஜன் செறியூட்டிகள், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவன் அருள், மாவட்ட காவல்துறை அதிகாரி விஜயகுமார், தாசில்தார் முன்னிலையில் வழங்கப்பட்டது.




வேலூர் மருத்துவக் கல்லூரிக்கு இரண்டு ஆக்ஸிஜன் செறியூட்டிகள் வழங்கப்பட்டது. அக்கல்லூரியின் டீன் மருத்துவர் செல்வி அதனை பெற்றுக்கொண்டார்.



ஹிந்துமுன்னணி மத்தியசென்னை சார்பில், ஹிந்து ஆட்டோ முன்னணி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு கொரோனா நிவாரண மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.



சேவாபாரதி சார்பில், ராணிப்பேட்டையில், 10 ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கும், வாலாஜா தாலுகா, பெரியந்தாங்கல் கிராமத்தில் 3 ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கும், சுமார் ரூ. 1,000 மதிப்புள்ள 22 மளிகை பொருட்கள் அடங்கிய கிட் வழங்கப்பட்டது.

# கோவேக்சின் தயாரிக்கும் பொதுத்துறை நிறுவனங்கள்

பாரதத்தில், கொரோனா வைரசுக்கான தடுப்பூசியை மக்களுக்கு செலுத்தும் பணிகள் உலகிலேயே மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை 22 கோடிக்கும் அதிகமான தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தி முடிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால், தடுப்பூசி தயாரிப்புகளை மேலும் வேகப்படுத்தி இலக்கை விரைவாக எட்ட மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இந்தியன் இம்யூனாலஜிக்கல்ஸ் லிமிடெட் (ஐ.ஐ.எல்) மற்றும் பாரத் இம்யூனாலஜிக்கல்ஸ் அண்ட் பயாலஜிக்கல்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிப்கால்) ஆகிய இரண்டு மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களுக்கும், மஹாராஷ்டிர அரசின் பொதுத்துறை நிறுவனமான, 'ஹாப்கைன் பயோ பார்மசூட்டிகல் கார்ப்பரேஷன் லிமிடட் நிறுவனத்துக்கும் அதற்கான தொழில்நுட்ப சாதனங்கள், நிதி உதவிகளை மத்திய அரசு அளித்துள்ளது. இந்த நிறுவனனள் வரும் செப்டம்பர் முதல் நவம்பருக்குள் முழு அளவிலான உற்பத்தியை துவங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# பலியானவர் குடும்பத்துக்கு உதவி




மேற்கு வங்கத் தேர்தலின்போது திருணமூல் கட்சி குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட பா.ஜ.க. தொண்டர் தேபபிரதா மைத்ரியின் மகனிடம் ரூ. 5 லட்சத்திற்கான காசோலையை மேற்கு வங்க எதிர்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி வழங்கினார். கட்சிக்காக தியாகம் செய்த அனைத்து குடும்பத்தினருக்கும் உதவி செய்யப்படும். அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை பெற்றுத் தரப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

# மாதிரி வாடகைச் சட்டம்



புதிய வாடகை, குத்தகை சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. அதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதுடன் அதனை அனைத்து மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் அனுப்பியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், புதிய சட்டங்களை இயற்றுவது அல்லது ஏற்கனவே உள்ள வாடகைச் சட்டங்களைத் திருத்திக்கொள்ளலாம். இச்சட்டம், நாடு முழுவதும் உள்ள வாடகை வீடுகள் தொடர்பான சட்ட கட்டமைப்பை மாற்றியமைக்க உதவும், இது அதன் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தூண்ட உதவும். மேலும், இந்த மாதிரி வாடகைச் சட்டம் நாட்டில் ஒரு துடிப்பான, நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வாடகை வீட்டு சந்தையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அனைத்துவகை வருமானப் பிரிவினருக்கும் போதுமான வாடகை வீட்டு வசதிகளை உருவாக்க உதவும். வீடு வாடகை விடும் முறையை முறையான சந்தைப்படுத்துதல் வழியாக நிறுவனமயமாக்கவும் இது உதவும்.

# காஷ்மீர் பா.ஜ.க. பிரமுகர் கொலை



காஷ்மீர் ட்ரால் பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. பிரமுகர் ராகேஷ் பண்டிட் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்த போதும் காவலரை விட்டுவிட்டு நண்பரை பார்க்க சென்ற போது இச்சம்பவம் நடந்துள்ளது.

# வெளிப்பட்ட உண்மை முகம்

உத்தர பிரதேசம் அலிகரின் நூர்பூரில் ஒரு முஸ்லிம் வன்முறை கும்பல், அங்குள்ள பட்டியலினத்தர்களைத் தாக்கி, அவர்களின் வீடுகளை விட்டு துரத்தினர். இது நடைபெற்ற சில நாட்களில், அசாசுதீன் ஒவைசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியை சேர்ந்த சையத் நஜிம் அலி, ஊடகங்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில், பா.ஜ.கவின் சகுந்தலா பாரதியின் கருத்துக்கு பதிலளித்ததார். அப்போது, 'ஆம், நமாஸ் நடக்கும். நாங்கள் ஹிந்துக்கள் அனுமதியின்றி திருமண ஊர்வலங்களை நடத்த அனுமதிக்க மாட்டோம். நீங்கள் எங்களின் அனுமதியின்றி திருமண ஊர்வலங்களை நடத்தினால், அதை நாங்கள் தடுப்போம். உங்களால்முடிந்ததை நீங்கள் செய்துகொள்ளுங்கள்' என கூறியுள்ளார்.

கடந்த மே 26 அன்று, இரண்டு திருமண ஊர்வலங்கள் ஒரு மசூதி வழியாக சென்றபோது அங்கிருந்த முஸ்லிம்கள் அவர்களைக் கொடூரமாக தாக்கினர். இதனால், ஹிந்துக்கள் பாதியிலேயே திரும்பிவிட்டனர். கடந்த வாரம், முஸ்லிம் குண்டர்கள் நூர்பூரில் ஹிந்துக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கிருந்து வெளியேற மிரட்டப்பட்டனர். அதனால் அங்குள்ள ஹிந்துக்கள் தங்கள் வீடுகளை விற்பனைக்கு என்று எழுதி வைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினர். மேற்கு உத்தரபிரதேசத்தில் முஸ்லீம் பெரும்பான்மையாக உள்ள கொண்ட நூர்பூர் கிராமத்தில், சுமார் 800 முஸ்லிம் குடும்பங்களும் 125 ஹிந்து குடும்பங்களும் வசிக்கின்றன. அங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளதால் தொடர் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும், அந்த ஹிந்துக்களில் பெரும்பாலோர் பட்டியல் சாதியான ஜாதவ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# கோயில் பூஜாரி மர்ம மரணம்



வங்க தேசத்தில் உள்ள பாரிசால் மாவட்டம் புது மார்க்கெட் வீதியில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் கோயில் பூஜாரியின் உடல், கோயிலின் அருகில் உள்ள குளத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளது. பாரிசால் மாவட்ட தீ அணைப்பு வீரர்கள் உடலை கண்டுபிடித்து வெளியே எடுத்துவந்தனர். இது ஒரு திட்டமிட்டக் கொலை என்று அங்குள்ள மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# வாட்ஸ்அப் குறைதீர் அதிகாரி நியமனம்



கடந்த வாரம் நடைமுறைக்கு வரும் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின்படி, 50 லட்சம் பயனர்களைக் கொண்ட வாட்ஸ்அப் இந்தியாவுக்கான தனது குறை தீர்க்கும் அதிகாரியாக பரேஷ் பி லாலை அந்த நிறுவனம் நியமித்துள்ளது. புதிய கொள்கைகளின்படி, ஒரு குறைதீர் அதிகாரி, நோடல் அதிகாரி மற்றும் ஒரு தலைமை இணக்க அதிகாரியை நியமிக்க வேண்டும். இந்த பணியாளர்கள் பாரதத்தில் வசிக்க வேண்டும். அதன்படி தற்போது வாட்ஸ்அப்பால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியை, பரேஷ் பி லால், வாட்ஸ்அப் அட்டென்ஷன்: குறைதீர் அதிகாரி, அஞ்சல் பெட்டி எண் 56, சாலை எண் 1, பஞ்சாரா ஹில்ஸ் ஹைதராபாத் 500 034 தெலுங்கானா என்ற முகவரியில் தொடர்புக் கொள்ளலாம். இதேபோல, கூகுள், முகநூல் உள்ளிட்ட பெரிய டிஜிட்டல் நிறுவனங்களும் புதிய சமூக ஊடக விதிகளின்படி குறை தீர்க்கும் அதிகாரிகளின் நியமனத்தை பிரதிபலிக்கும் வகையில் தங்கள் வலைத்தளங்களை புதுப்பிக்கத் தொடங்கியுள்ளன.

# சென்ட்ரல் விஸ்டா உச்ச நீதிமன்றத்தில் முறையீடு

'சென்ட்ரல் விஸ்டா' என்பது புதிய நாடாளுமன்றம் உள்ளிட்ட பல கட்டிடங்களை உள்ளடக்கிய ஒரு வளாகம். கொரோனா இரண்டாவது அலை ஏற்பட்டுள்ள நிலையில், கட்டுமானப் பணியாளர்கள், குடிமக்கள் நலன் கருதி, சென்ட்ரல் விஸ்டா திட்ட கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதிக்கக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த டெல்லி உயர் நீதிமன்றம், சென்ட்ரல் விஸ்டா திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. கட்டுமானப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் அங்கேயே தங்கியுள்ளனர். கொரோனா விதிமுறைகள் பின்பற்றப்படுகிறது. எனவே, கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதிக்க எந்த முகாந்திரமும் இல்லை என கூறி மனுவை தள்ளுபடி செய்தது. மேலும், இம்மனு உள்நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டதாக கூறிய நீதிமன்றம், மனுதாரர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்ததும் உத்தரவிட்டது. இந்நிலையில் அவர்கள் இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



# மத நடவடிக்கைகளுக்கு ஓய்வூதியம்

ஜனநாயகம், சமத்துவம், அமைதி மற்றும் மதசார்பின்மைக்கான குடிமக்கள் என்ற அமைப்பின் சார்பாக கேரள உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'மதரசா பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் உள்ளிட்ட பிற சலுகைகள் வழங்குவதற்காக இயற்றப்பட்ட கேரள மதரசா ஆசிரியர்கள் நல நிதியம் சட்டம் 2019ஐ ரத்து செய்ய வேண்டும்' என்று கோரப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை நீதிபதி முஹம்மது முஸ்டாக் மற்றும் நீதிபதி எடப்பகத் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் 'இந்த மதரசா பள்ளியில் குர்ஆன் மற்றும் இஸ்லாம் தொடர்பான கல்வியை மட்டுமே வழங்குகின்றன. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட மதத்தை ஊக்குவிக்கும் பள்ளிக்கு அரசு எவ்வாறு நிதி அளிக்க முடியும். அப்படியெனில், அதன் நோக்கம் என்ன, கேரளாவில் செயல்பட்டு வரும் மதரசா பள்ளிகள் உத்தரபிரதேசம், மேற்கு வங்க மாநிலங்களில் செயல்பட்டு வரும் மதரசாக்களைவிட முற்றிலும் மாறுபட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு மாநிலங்களிலும் செயல்பட்டுவரும் மதரசா பள்ளிகள் மதசார்பற்ற கல்வியை அளித்து வருகின்றன. இது நாட்டின் மதசார்பின்மை கொள்கைகளுக்கு எதிரானது' என்று தெரிவித்தனர். மேலும், 'கேரள மதரசா ஆசிரியர் நல நிதிக்கு மாநில அரசு ஏதேனும் பங்களிப்பு செய்துள்ளதா என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்' என்றும் கூறியுள்ளனர்.




# கோயில் உண்டியல் பணம் கொள்ளை



தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரை தேரடி தெருவில் பிரசித்தி பெற்ற முப்பிடாதி அம்மன் கோயில் ஒன்று அமைந்துள்ளது. கோயிலுக்கு உள்ளே ஒரு உண்டியலும், வெளியே ஒரு உண்டியலும் வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தன்று இரவில் இந்த கோயிலுக்குள் புகுந்த சில மர்மநபர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு உண்டியல்களையும் உடைத்து அதில் இருந்த சுமார் 15 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர். மறுநாள் காலை கோயில் உண்டியல் உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி பொதுமக்கள் காவல்துறைக்கு தகவல் அளித்தனர். காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# அமெரிக்க நிபந்தனையை அரசு ஏற்குமா?

'வெளிநாட்டு தடுப்பூசிகளை நமது நாட்டில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர, உள்நாட்டில் மீண்டும் ஒருமுறை தனியாக பரிசோதனைகள் நடத்தத் தேவையில்லை. வேறு நாடுகளிலோ அல்லது உலக சுகாதார அமைப்பின் அனுமதி பெற்றிருந்தால் போதுமானது' என, மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இதையொட்டியே, ரஷ்யாவின் 'ஸ்புட்னிக் வி' தடுப்பூசியை மத்திய அரசு இறக்குமதி செய்தது. அதை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அமெரிக்காவின் 'பைஸர், மாடர்னா' தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய, மத்திய அரசு அந்நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. தங்கள் தடுப்பூசிகளால் யாருக்காவது பாதிப்பு ஏற்பட்டால், அவர்களுக்கான இழப்பீடு உள்ளிட்ட சட்டப் பிரச்னைகளில் இருந்து மத்திய அரசு பாதுகாப்பு அளித்தால் தடுப்பூசிகளை வழங்கத் தயார்' என, அந்நிறுவனங்கள் கூறியுள்ளன. தற்போதுள்ள அவசரத் தேவையைக் கருதி, அந்த நிபந்தனைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

எனினும், பைசர் தடுப்பூசிகளால் வெகு சிலருக்கு ஏற்படும் இருதய அழற்சி நோய் குறித்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய ஆய்வுகள் சமீபத்தில் வெளியாகியுள்ள சூழலில், இது குறித்து மத்திய அரசு சிந்திக்க வேண்டும். அரசின் கொள்கையை சுட்டிக்காட்டி சீனா தனது தடுப்பூசிகளை நமது தலையில் கட்ட முயற்சி எடுக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.




# மசூதியில் மதகுரு கைது



டெல்லியின் வடகிழக்கு பகுதியில் உள்ள மசூதி ஒன்றில், 12 வயது சிறுமி ஒருவர் தண்ணீர் எடுக்கச் சென்று இருக்கிறார். அப்போது, அங்கு இருந்த 48 வயது மதிக்கத்தக்க முஸ்லிம் மதகுரு ஒருவர், சிறுமியை மிரட்டி பலாத்காரம் செய்துள்ளார். மேலும், இந்த சம்பவத்தை வெளியே சொல்லக்கூடாது என்றும் மிரட்டியுள்ளார். வீட்டிற்கு சென்ற சிறுமி, நடந்தவற்றை பெற்றோர்களிடம் கூறியுள்ளார். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் பெற்றோர், சம்பந்தப்பட்ட முஸ்லிம் மதகுரு மீது டெல்லி காவல்துறையில் புகார் அளித்துள்ளனர். அந்த முஸ்லிம் மதகுரு மீது போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவரை 14 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். #JusticeForOurGirl என்னும் ஹேஷ்டேக் டிரெண்ட் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், கோயில்கள் அல்லது எதாவது மடத்தில் இதுபோன்று நடந்திருந்தால் குரல் கொடுக்கும் அரசியல்வாதிகளும், சமூக அர்வலர்களும், சினிமா பிரபலங்களும் தற்போது வாய் மூடி மவுனம் காப்பது ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

# பா.ஜ.க. வுக்கு சபாநாயகர் பதவி



புதுச்சேரி பா.ஜ.க தலைமை அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதற்குப்பின், பா.ஜ.க மாநிலத்தலைவர் சாமிநாதன் செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது அவர், 'தேசிய ஜனநாயக கூட்டணியில் அமைச்சர்கள், சபாநாயகர் பங்கீடு முடிந்தது. பா.ஜ.கவிற்கு சபாநாயகர் பதவியுடன் அமைச்சர்கள் பதவியை தர உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. பா.ஜ.கவில் யாருக்கு என்ன பதவி என்பது பற்றி கட்சி தலைமை தெரிவிக்கும். பேச்சுவார்த்தை சமூகமாக முடிவடைந்துள்ளது. முதல்வர் ரங்கசாமிக்கு கொரோனா தொற்று ஏற்பட்ட காரணத்தால் யாரும் சந்தித்து பேச முடியவில்லை. அதனால், அமைச்சரவை அமைவதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது அவர் குணமடைந்தவுடன், பேசி நல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அமைச்சரவை அமைந்து அமைச்சர்கள் பொறுப்பேற்பார்கள்' என தெரிவித்தார்.

# யதி நர்சிங்கானந்த் மீது கொலை முயற்சி



உத்தர பிரதேசம், காஜியாபாத்தில் உள்ள தஸ்னா தேவி கோயில் பூஜாரியாக உள்ளவர் யதி நர்சிங்கானந்த். இவர் ஹிந்துக்களுக்காக போராடி வருபவர், மதமாற்றம், லவ் ஜிஹாத் உள்ளிட்ட பல பிரச்சனைனைகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருபவர், இதனால், அவரின் மீது பலமுறை முஸ்லிம் பயங்கரவாதிகள் கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், அவர் மீது மற்றொரு கொலை முயற்சி சமீபத்தில் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து உதவியாளரான அனில் யாதவ் போலீசில் புகார் அளித்தார். காஷிஃப், விபுல் என்ற இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து மூன்று அறுவை சிகிச்சை கத்திகள் மற்றும் சில விஷப் பொடிகள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது என காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஈராஜ் ராஜா தெரிவித்துள்ளார். பிடிபட்டவர்களிடம் இருந்த பையை அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவல்துறையினர் வாசலில் சோதனையே செய்யாமல் உள்ளே விட்டுள்ளனர் என்று புகார் கூறப்பட்டுள்ளது. கடந்த மே 17ல்கூட ஜெய்ஷ்இமுகமது பயங்கரவாதி இவரை கொல்ல முயற்சித்து பிடிபட்டான் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

# மேன் மக்கள் மேன் மக்களே



தற்போது தமிழ்நாட்டில் கொரோனாவின் இரண்டாவது அலையால் ஊரடங்கு அமலில் உள்ளது. இதனால் பலரின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மாம்பலத்தில் தள்ளு வண்டியில் சுண்டல், வடை விற்று தங்கள் வாழ்க்கையை நடத்தி வரும் நபர், தற்போது பல ஏழை மக்கள் உணவின்றி தவித்து வருவதால் தன்னால் முடிந்த அளவுக்கு உணவு, தண்ணீர் ஆகியவற்றை இலவசமாக வழங்கி வருகிறார். இவரின் இந்த செயலுக்கு, சமூக ஊடகத்தில் பலரும் தங்களுடைய பாராட்டை தெரிவித்து வருகின்றனர். இவரைபோல சிலர் ஆங்காங்கு எவ்வித விளம்பரமும் இன்றி தங்களால் முடிந்த தொண்டுகளை செய்து வருகின்றனர். இந்த கடினமான காலகட்டத்திலும் சத்தமில்லாமல் தங்களால் முடிந்த அளவு மக்களுக்கு உதவும் இவர்களை போன்றவர்களின் நல்ல மனது நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது!?

# ஆர்.ஜே.டி. மாநிலங்களவை உறுப்பினர் கைது



உர மோசடி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பண மோசடி விசாரணை தொடர்பாக, ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி) கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் அமரேந்திர தாரி சிங்கை அமலாக்கத்துறை கைது செய்தது. முன்னதாக இவ்வழக்கை சி.பி.ஐ பதிவு செய்தது. பிறகு மேலதிக விசாரணைக்காக இந்த வழக்கு அமலாக்கத் துறைக்கு மாற்றப்பட்டது. இவ்வழக்கு தொடர்பாக டெல்லி, ஹரியானா, மும்பை உள்ளிட்ட 12 இடங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஏற்கனவே, இஃப்கோ தலைவர் யு.எஸ். அவஸ்தி மற்றும் இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் நிறுவனத்தின் முன்னாள் எம்.டி. பர்விந்தர் சிங் கெலாட் மற்றும் அவர்களது மகன்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுதுள்ளது. இந்த ஊழலுடன் தொடர்புடைய ஒரு நிறுவனமான ஜோதி டிரேடிங் கார்ப்பரேஷனில் பங்குதாரராகவும் அமரேந்திர தாரி சிங் உள்ளார். லாலு பிரசாத் யாதவுக்கும் அவரது மகன் தேஜஸ்வி யாதவுக்கும் மிகவும் நெருக்கமான இவர் கடந்த 2020ல் மாநிலங்கள் அவை உறுப்பினரானார்.

# வீணடிக்கப்படும் தடுப்பூசிகள்



ராஜஸ்தானில் கடந்த சில நாட்களுக்கு முன், கொரோனா தடுப்பூசி மருந்துகள் குப்பைகளில் வீசப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 500க்கும் மேற்பட்ட குப்பிகளில் 2,500க்கும் அதிகமான டோஸ் மருந்துகள் அதில் இருந்தன. இதனை ராஜஸ்தானின் சுகாதார அமைச்சர் ரகு சர்மா மறுத்தார். இந்நிலையில், இச்செய்தியை வெளியிட்ட டெய்லி டைனிக் பாஸ்கர் என்ற அந்த செய்தி நிறுவனம் இது குறித்து மேலும் தகவல் சேகரித்தது. அதில், மேற்கண்ட சம்பவம் மட்டுமல்லாமல், சில மருத்துவமனைகளில், 80 சதவீதம் மருந்து நிரப்பப்பட்ட குப்பிகளை குப்பையின் இடையே வைத்து அப்புறப்படுத்தியதைக் கண்டறிந்தது. சில இடங்களில் மருந்து குப்பிகள் எரிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் தடுப்பூசிகளை 12 அடி ஆழகுழிகளில் புதைத்து வைக்கப்பட்டன. அதை குறித்து கேட்டபோது அவை காலாவதியான மருந்துகள் என கூறப்பட்டது. எனினும் மருத்துவ குப்பைகளை அகற்றவென்று பிரத்தியேக வழிமுறைகள் உள்ளன. அதனையும் அவர்கள் பின்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஹர்ஷ வர்தன், ‘டைனிக் பாஸ்கர்’ மற்றும் ‘ராஜஸ்தான் பத்ரிகா’ ஆகியவற்றில் வெளியிடப்பட்ட இந்த செய்திகளை மேற்கோள் காட்டி, அம்மாநில சுகாதார அமைச்சர் ரகு ஷர்மாவிடம் இது குறித்து உடனடியாக ஆராய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# சீனாவின் உயிரியல் போர்




சீனாவில் இருந்து பரவிய கொரோனா வைரஸால் உலகம் முழுதும் உள்ள எண்ணற்ற மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். லட்சக் கணக்கில் இறந்துள்ளனர். பல நாடுகள் மோசமான பொருளாதார பேரிழப்புகளை சந்தித்து வருகின்றன. இந்நிலையில், இந்த வைரஸ் குறித்து ஆய்வு செய்து வரும் அமெரிக்காவை சேர்ந்த முன்னாள் ராணுவ அதிகாரியும் மருத்துவருமான லாரன்ஸ் செல்லின், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்தார். அதில், 'கொரோனா வைரஸ் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். இது, சீனாவால் திட்டமிடப்பட்டு உலக நாடுகளின் மீது நடத்தப்பட்ட ஒரு 'பயோவார்' எனப்படும் உயிரியல் போர். இதற்கு, சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் ராணுவமும்தான் முழு பொறுப்பு. கொரோனா பரவலால், உலக நாடுகள் மோசமான பாதிப்புகளை சந்தித்து வரும் நிலையில், சீனா மட்டும் அமைதிகாத்து வருவது அனைவருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனாவிலும், கொரோனாவால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதை, சீன கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. எனினும், அதற்கான உரிய தகவல்களை அவர்களிடம் இருந்து நம்மால் பெற முடியவில்லை' என கூறியுள்ளார்.

# அத்துமீறும் சீனா



சீனா தொடர்ந்து பல ஆண்டு காலமாக தன்னை சுற்றியுள்ள அனைத்து அண்டை நாடுகளுடன் மோதல் போக்கில் ஈடுபட்டு வருகிறது. அவ்வகையில், சமீபத்தில் தெற்காசிய நாடான மலேசியாவுடன் கடல் மற்றும் வான் எல்லையில் மோதல் போக்கில் ஈடுபட்டுள்ளது. சீனாவின் 16 போர் விமானங்கள் மலேசியா வான் எல்லைக்குள் நுழைந்துள்ளன. இது குறித்து சீனாவிடம் கேட்டபோது, சீன விமானப்படை வழக்கம்போல பயிற்சி மேற்கொள்வதாகவும், சர்வதேச வான் எல்லைக்குள் நுழைய சீன போர் விமானங்களுக்கு அனுமதி உண்டு, சர்வதேச வான் எல்லைக்குள் நுழைய சீன போர் விமானங்களுக்கு அனுமதி உண்டு என சீன ராணுவம் தெரிவிக்கிறது. இந்த அத்துமீறல் நடைபெற்றுள்ள நிலையில் மலேசிய வெளியுறவு துறை அமைச்சர் ஹிஜாமுதீன் உசைன், மலேசியாவில் உள்ள சீன தூதரகத்துக்கு இதுகுறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், 'சீன கப்பல்கள் சர்வதேச எல்லையைத் தாண்டி மலேசிய கடல் எல்லைக்குள் அடிக்கடி அத்துமீறி நுழைகின்றன. சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் அவ்வப்போது சீனா அத்துமீறலில் ஈடுபட்டு வருகிறது. கடல் எல்லையில் சர்வதேச சட்டத்தைப் பின்பற்றாமல் அவ்வப்போது சீன கடற்படை மற்றும் எண்ணெய் கப்பல்கள் ஆகியவை அத்துமீறி நடந்து கொள்வது அண்டை நாடுகளை அச்சுறுத்தி வருகின்றன' என தெரிவித்துள்ளார்.





# விஜயபாரதம் சந்தா செலுத்த . . .

## விஜயபாரதம்

தேசிய வார இதழ்

எண். 79, முதல் தளம், டாக்டர் அழகப்பா சாலை,
புரசைவாக்கம், சென்னை – 600 084

Pay using Paytm or any UPI App

Bank a/c or Wallet

| | | |
|---|---|---|
| A/C Name | : | Bharathiya Kalachara Samithi Vijaya Bharatham, |
| Branch | : | INDIAN BANK, Alagappa Road Branch |
| A/C NO | : | 948422415 |
| IFS Code | : | IDIB000D036 |
| 1 year | : | Rs.600 |
| 2 year | : | Rs.1150 |
| 5 year | : | Rs.2750. |

சந்தா செலுத்தியவர்கள் / **VPP** யில் பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி தகவல்களை தவறாமல் விஜயபாரதத்திற்கு தெரிவிக்கவும்

email. vijayabharatham78@gmail.com
Phone : 044 26421271, 26420870
SMS / : 9600478526,